GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA3A**

**5987–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three – year Regular Course)

Second Year – Third Semester

CONSTITUTIONAL LAW – II

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically examine the ruling of Supreme Court that the state would be liable to pay compensation for the negligent act of its officers and that it would not be absolved from the principle of "Sovereign immunity of the State".

   உச்சநீதிமன்ற தீர்ப்பின் படி, அரசாங்கம் தனது ஊழியர்களின் கவனக்குறைவுக்கு நஷ்டஈடு வழங்க பொறுப்புள்ளது. மேலும், 'அரசின் இறையாண்மை விதிவிலக்கு' என்ற கொள்கையின்படி இனிமேல் விடுவித்துக்கொள்ள முடியாது, என்பதை கூர்ந்தாய்வு செய்க.

2. Write an essay on 'Original' and 'Appellate' Jurisdiction of the Supreme Court.

   உச்சநீதிமன்றத்தின் 'அசல்' மற்றும் 'மேல்முறையீடு' ஆள்வரை குறித்து ஒரு கட்டுரை வரைக.

3. Discuss the Legislative Relations between Central Government and State Governments.

   மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையேயான சட்டம் இயற்றும் உறவுமுறை குறித்து விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Enumerate the qualifications and disqualifications of Members of Parliament in India.

   இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகுதிகள் மற்றும் தகுதியின்மைகளை பட்டியலிடுக.

5. Explain the appointment of High Court Judges, with reference to decided cases.

தீர்ப்புகள் வழி நின்று உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் குறித்து விளக்குக.

6. Examine the role of Finance Commission.

நிதி ஆணையத்தின் பங்களிப்பினை குறித்து ஆராய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Doctrine of Proportionality.

விகிதாச்சார கோட்பாடு.

(b) Settlement of Election Disputes under Article 329.

ஷரத்து 329-ன் கீழ் தேர்தல் சர்ச்சைகளுக்கு முடிவுகாணுதல்.

(c) Advocate – General for the State.

மாநில தலைமை வழக்குரைஞர்.

(d) Writ of Certiorari.

சான்றளிக்கும் நீதிப்பேராணை.

(e) Objectives for creating All India Services.

அனைத்து இந்திய குடிமைப்பணிகள் உருவாக்கியதன் நோக்கங்கள்.

(f) Joint – Sitting of Houses of Parliament.

நாடாளுமன்ற அவைகளின் கூட்டுஅமர்வு.

(g) Doctrine of Stare Decisis.

முன்தீர்ப்புமுறை ஏற்பு கோட்பாடு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The pension benefits of an Assistant Engineer, PWD was reduced by a State Government, on the basis of confidential report, without giving him any opportunity for such reduction. Decide the case.

பொதுப்பணித்துறையைச் சார்ந்த ஒரு உதவிப் பொறியாளரின் ஓய்வூதிய பலன்கள், ஒரு மந்தன அறிக்கையின் அடிப்படையில் குறைக்கப்பட்டது. இத்தகைய குறைப்பிற்கு, அந்த பொறியாளருக்கு பதில் தர எந்த வாய்ப்பும் மாநில அரசால் வழங்கப்படவில்லை. வழக்கை தீர்மானிக்கவும்.

9. A collector of customs imposed invalid conditions for release of gold on payment of fine in lieu of confiscation. Decide, whether writ of prohibition can be issued by High Court?

ஒரு சுங்க கட்டண வரி அதிகாரி, பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்திற்கு, அபராதம் பெற்று விடுவிப்பதோடு செல்லுபடியாகாத நிபந்தனைகளை விதித்தார். இவரது உத்திரவிற்கு எதிராக தடை உறுத்தும் நீதிப்பேராணை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்க முடியுமா?

10. Raju injured in an accident was taken to the Rajiv Gandhi Govt. Hospital for treatment. The receptionist refused to accept for treatment without procedural formalities to be completed. Does it amount to tortious liability of the state? Decide.

விபத்தில் காயமடைந்த ராஜூ என்பவரை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சட்டப்படி கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் மருத்துவ சிகிச்சைக்கு அனுமதிக்க இயலாது என வரவேற்பறை ஊழியர் மறுத்துவிட்டார். இச்செயல் அரசின் தீங்காகுமா? தீர்மானிக்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA3B**

**5988–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

LAND LAWS

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Right to property is not a fundamental Right" – Explain.

   "சொத்திற்கான உரிமையானது அடிப்படை உரிமை அல்ல" – விவரி.

2. Explain the relevant provisions on fixation of ceiling limit on Agriculture holding in Tamilnadu.

   தமிழ்நாட்டின் விவசாய நிலங்களின் உச்ச வரம்பு நிர்ணயிப்பதற்கு தொடர்புடைய வகையங்களை விவரி.

3. How is fair rent determined under the Tamilnadu Buildings (Lease and Rent Control) Act, 1960?

   தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாட்டுச்) சட்டம், 1960ன் கீழ் நியாய வாடகை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the provisions relating to providing conferment of ownership and alternative site to the occupants of Kudiyiruppu.

   குடியிருப்பு உறைவிடம் கொண்டோருக்கு உரிமை பெறவும் மற்றும் மாற்றுமனை பெறுவதற்கான வகையங்களையும் விவரிக்கவும்.

5. Elucidate the salient features of the Land Acquisition Compensation Rehabilitation and Resettlement Act, 2013.

2013 – ஆம் ஆண்டின் நில எடுத்தல், இழப்பீடு, மீள்குடியேற்றம் மற்றும் மறுகுடியமர்த்துதலின் சிறப்பியல்புகள் எவ்வாறு வேறுபடுகின்றன?

6. Explain the salient features of the Tamilnadu Cultivating Tenants Protection Act, 1955.

1955 – ம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் முக்கிய கூறுகள் குறித்து விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Statutory Tenant

செய்சட்ட வாடகைதாரர்

(b) Kaieruvaramdar

கையேறு வரம்தார்

(c) Land Board

நில வாரியம்

(d) Nuisance

தொல்லை

(e) Public Purpose

பொது நோக்கம்

(f) Permanent Settlement.

நிரந்தர நிலவரித் திட்டம்

(g) Standard Acre.

தரநிலை ஏக்கர்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The landlord let out a building for running a school. With the consent of the landlord the tenant demolished the building and constructed a new structure as per his requirement. Now the landlord wishes to evict the tenant. Advise.

கட்டிட உரிமையாளர் ஒரு பள்ளியை நடத்துவதற்காக தனது கட்டிடத்தை வாடகைக்கு விட்டார். கட்டிட உரிமையாளரின் இசைவுடன், குத்தகைதாரர் அக்கட்டிடத்தை உடைத்து விட்டு தனது தேவைக் கேற்றபடி புதிய கட்டிடம் ஒன்றை கட்டிக் கொண்டார். தற்போது கட்டிட உரிமையாளர் குத்தகைதாரரை வெளியேற்ற விரும்புகிறார். வழிகாட்டுக.

9. 'X' let out his agricultural land to 'Y'. 'Y' used the land for non–agricultural purpose. Did 'Y' commit any wrong? Explain.

'X' என்பவர் தனது நிலத்தை வேளாண்மை செய்வதற்காக 'Y'–க்கு குத்தகைக்கு விட்டிருந்தார். 'Y' அதனை வேளாண் அல்லாத வேறு பயனுக்காக பயன்படுத்தினார். 'Y' ஏதேனும் தவறு இழைத்துள்ளாரா? விளக்கவும்.

10. A family which consists of eight members, own 40 standard acres of land. Under the Land Ceiling Act, how much they can own and how much is the surplus?

எட்டு நபர்களைக் கொண்ட ஒரு குடும்பத்திடம் 40 தர நிலை ஏக்கர்கள் நிலம் உள்ளது. நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அவர்கள் எத்தனைத் தரநிலை ஏக்கர்களைச் சொந்தமாகக் கொள்ளலாம்? எவ்வளவு மிகை நிலை?

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA3C**

**6028–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

INTERPRETATION OF STATUTES

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The words of an enactment are to be given their ordinary and natural meaning and if such meaning is clear, effect should be given to a provision of a statute whatever may be the consequences". Elucidate.

   "சட்டத்தில் உள்ள வார்த்தைகளுக்கு சாதாரண மற்றும் இயற்கையான பொருளைக் கொடுத்து, அந்த பொருளானது தெளிவாக இருக்கும் பட்சத்தில் சட்டத்தில் உள்ள பிரிவுகளுக்கு எந்த விளைவுகளாக இருந்தாலும் அந்த பொருளையே எடுத்துக் கொள்ள வேண்டும்" – தெளிவுபடுத்துக.

2. Examine the basic principles of Interpretation of the Constitution.

   அரசமைப்பு சட்டத்தின் சட்டப்பொருள் விளக்கத்தின் அடிப்படை விதிகளை ஆராய்க.

3. Analyse the salient features of the General Clauses Act, 1897.

   பொது வகையச் சட்டம், 1897ன் சிறப்பம்சங்களை ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கு ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "A penal statute has to be strictly construed". Examine.

   "தண்டனைச் சட்டம் ஒன்று கண்டிப்புடன் பொருள் கொள்ள வேண்டும்" – ஆராய்க.

5. Explain the general principles relating to Retrospective operation of statutes.

   இயற்சட்டம் பின்மேவு செயலாக்கம் சம்பந்தமான பொதுக் கொள்கைகளை விவரிக்க.

6. 'A statute has to be read as a whole'. Explain.

'ஒரு சட்டம் முழுமையாகக் கருதப்படல் வேண்டும்' – விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Restrictive Construction

கட்டுப்படுத்தப்பட்ட பொருள் கொள்ளுதல்

(b) Declaratory Clauses

விளம்புகை விதிகள்

(c) Deeming fiction

நிகர் நிலை சட்டப்புனைவு

(d) Rule of 'Causus omissus'

செய்யத் தவறிய காரணத்தால் இட்டுக்கட்டும் விதி

(e) Enabling Statutes

இயலுமாறு செய்யும் சட்டம்

(f) Laches

காலதாமதம்

(g) Doctrine of Severability.

இணைப்பகற்றும் கோட்பாடு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Rajasthan State Legislators passed a tax law imposing tax on certain goods carried by roads or inland waterways in the State of Rajasthan. The Tea Owners Association filed a case challenging the validity of the tax law. Argue.

சாலை வழியாக மற்றும் பல்வேறு வழிகளில் சரக்குகளை ராஜஸ்தான் மாநிலத்திற்குள் எடுத்துச் செல்வோருக்கு வரி விதிக்கும் நோக்கோடு வரிச்சட்டம் ஒன்றை, ராஜஸ்தான் மாநிலம் இயற்றியது. தேயிலை தயாரிப்பாளர்கள் சங்கம் இந்த வரிச் சட்டத்தின் செல்லும் தன்மையை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்தனர் – விவாதிக்கவும்.

9. Arun was directed to file written statement in City Civil Court within a period of 30 days. Arun filed the written statement on the day next to 30th day since the court closed on that day. Whether the written statement was filed within time? Discuss it with reference to computation of time under Section 10 of the General Clauses Act, 1897.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்றில் அருண் என்பவர் எதிருரை தாக்கல் செய்ய 30 நாட்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டார். அந்த 30வது நாள் முடிவுறும் அன்று நீதிமன்றம் இயங்கவில்லை என்பதால் அருண் தன்னுடைய எதிர் உரையை அதற்கு அடுத்த நாள் தாக்கல் செய்தார். எதிர் உரை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? இதனை பொது வகைச் சட்டம் 1897-ன் கீழ் காலத்தை கணக்கிடுதல் பற்றி உள்ள பிரிவு 10-ஐ மேற்கோள் காட்டி விளக்குக.

10. Bihar Finance Act, 1981 imposed purchase tax on sugarcane used in sugar manufacture by Mr. Ashok and also Bihar Sugarcane (Regulation of Supply and Purchase) Act, 1981 imposed purchase tax on sugarcane. Ashok challenged such practice on the ground of double taxation. Advise Ashok.

அசோக் என்பவருக்கு சர்க்கரை உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கரும்பிற்கு பீகார் நிதிச்சட்டம், 1981 கொள்முதல் வரி விதித்தது. மேலும் பீகார் கரும்பு விநியோகம் மற்றும் கொள்முதல் ஒழுங்குமுறை சட்டம், 1981 மூலம் கரும்பிற்கு கொள்முதல் வரி விதித்தது. அசோக் அதனை இரட்டை வரி விதிப்பு என்று வாதிடுகிறார். அசோக்கிற்கு ஆலோசனை வழங்கவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA3D**

**6047–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

COMPANY LAW

Time : $2\frac{1}{2}$ hours — Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "A company is a legal artificial person." — Explain with its salient features and characteristics.

   "நிறுவனம் என்பது ஒரு சட்டபூர்வ செயற்கை நபராகும்." — அதன் சிறப்பியல்புகள் மற்றும் பண்புகளை கொண்டு விளக்கவும்.

2. Describe the Civil and Criminal Liability on the breach of the Golden Legacy as to the Statement of Prospectus.

   திட்ட அறிவிப்பின் தங்க மரபு விதியை மீறுதலுக்கான உரிமையியல் மற்றும் குற்றவியல் கடப்பாட்டை விவரி.

3. Differentiate "Voluntary Winding Up" from "Compulsory Winding Up" of a Company.

   நிறுவனத்தின் கட்டாய கலைப்பை, தன்னியல்பான நிறுவன கலைப்பிலிருந்து வேறுபடுத்துக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Who can and cannot become member of company?

   நிறுவனத்தின் உறுப்பினராக எவரால் இயலும்? எவரால் இயலாது?

5. Explain the crystallisation of Floating Charge.

   படரும் பற்று, முற்றுபெறுதலை விளக்குக.

6. "Forewarned is Forearmed." — Explain SEBI's precautionary proceedings to regulate business in stock exchange.

"முன்னெச்சரிக்கப்பட்டது பாதுகாப்பானது." — பங்கு பரிவர்த்தனையின் வணிகத்தை நெறியுறுத்த செபியின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Corporate Social Responsibility
நிறுவன சமூக பொறுப்பு

(b) Pre-emptive rights of Shareholders
பங்குதாரர்களின் முன்னுரிமைகள்

(c) Investor Education and Protection Fund
முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பாளர் நிதி

(d) Ordinary and Special Resolution
சாதாரண மற்றும் சிறப்பு தீர்மானம்

(e) One Person Company
தனிநபர் நிறுவனம்

(f) Key Managerial Personnel
மேலாளர் சார் பணியாளர்கள்

(g) Differentiate Company and Partnership Firm.
நிறுவனத்தையும் கூட்டாண்மை நிறுமத்தையும் வேறுபடுத்துக.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "A" applied for 400 shares in "B Ltd" company. The clerk in the company who owned no shares executed transfer in favour of "A". The company without requiring the clerk to produce certificates registered the transfer and issued the new certificate. Analyse the validity of new Share Certificate.

"அ" என்பவர் "ஆ லிமிடெட்" என்ற நிறுவனத்தில் 400 பங்குகளுக்கு விண்ணப்பித்திருந்தார். பங்குகளின் உரிமை பெறாத அந்நிறுவனத்தின் கணக்காளர் "அ" விற்கு பங்கு மாற்றம் செய்தார். நிறுவனம், கணக்காளரின் பங்கு சான்றிதழை சரிபார்க்காமல் புதிய பங்கு சான்றிதழை வழங்கியது. புதிய பங்கு சான்றிதழின் செல்லுந்தன்மையை ஆராய்க.

9. The shareholders issued the requisition notice to hold an extra-ordinary General Meeting for the purpose of removing nine of the part-time directors without mentioning the reason. Is the requisition notice valid? Analyse.

பங்குதாரர்கள் ஒன்பது பகுதிநேர இயக்குநர்களை நீக்கம் செய்வதற்காக எவ்வித காரணமும் குறிப்பிடாமல் கூடுதல் சாதாரண பொதுக் கூட்டம் நடத்துவதற்கு கோரிக்கை அறிக்கை அனுப்பினார்கள். இவ்வறிக்கை செல்லுபடியாகுமா? ஆராய்க.

10. A registered Building Society started Banking Business and borrowed money on Loan Agreements. Is the Building Society liable for the borrowed Loan amount? Explain.

ஒரு பதிவு செய்யப்பட்ட கட்டுமான நிறுவனம் வங்கி தொழிலை தொடங்கி கடன் உடன்பாட்டின் பேரில் கடன் வாங்கியது. கடன் தொகையை செலுத்துவதற்கு கட்டுமான நிறுவனத்திற்கு கடப்பாடு உள்ளதா? விளக்குக.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA3E** **5989–24**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2024.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

BANKING LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the salient features of the Recovery of Debts Due to Banks and Financial Institutions Act, 1993.

   1993–ம் ஆண்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் கடன் வசூல் சட்டத்தின் முக்கிய அம்சங்களை விவரி.

2. Define “Banker” and "Customer". Discuss their general and legal relationship.

   ‘வங்கியர்' மற்றும் 'வாடிக்கையாளர்' வரையறை செய். அவர்களின் பொதுவான மற்றும் சட்ட பூர்வமான உறவு முறைகளை விவாதிக்க.

3. Define ‘negotiation' and bring out the points of distinction between negotiability and assignability.

   “மாற்று முறையாவணத் தன்மை” வரையறை செய். மாற்றுமுறையாவணத் தன்மைக்கும், மாற்றுரிமைத் தன்மைக்கும், உள்ள வேறுபாடுகளை எடுத்துக் கூறுக.

PART B — (2 × 7= 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the importance of SARFAESI Act, 2002.

   சார்பாசி சட்டம், 2002–ன் முக்கியத்துவத்தை பற்றி விவரி.

5. Explain the Rights and Duties of a Banker.

   ஒரு வங்கியாளரின் உரிமைகளையும், கடமைகளையும் விளக்குக.

6. Who is a “holder”? What are the rights and privileges of a Holder in Due Course?

   “உரியவர்" என்பவர் யார்? முறைப்படி உரியவரின் உரிமைகள் மற்றும் சலுகைகள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) NABARD

நபார்டு

(b) Rule in Clayton's case

கிளேட்டன் வழக்கின் விதி

(c) Letter of Credit

நம்பிக்கை கடிதம்

(d) Overdraft

மிகைப் பற்று

(e) Noting and protest

மறுப்புக் குறிப்பும், மறுத்துரையும்

(f) Crossing of cheque

காசோலையில் குறுக்குக்கோடிடல்

(g) Promissory notes

கடனுறுதிச் சீட்டுகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ram deposits Rs.50,000/- in a fixed deposit for 3 years. After one year, he is in an urgent need for money, so he approaches the banker and demands the money. Discuss the liabilities of the Banker.

ராம் என்பவர் ரூ.50,000த்தை மூன்று வருட காலத்திற்கு காலவரை வைப்புத்தொகையாக போட்டிருந்தார். ஒரு வருடத்திற்கு பிறகு அவசரத்திற்கு அந்த பணம் தேவைப்பட்டது. அதனால் வங்கியை அணுகி அந்த பணத்தை உரிமையோடு கோரினார். இந்நிலையில் வங்கியரின் பொறுப்பு நிலையை விவாதிக்க.

9. 'A', obtains a cheque and puts it in his coat pocket. The coat is sent for dry wash. Consequently the cheque becomes faded. Can the banker refuse to pay it?

'அ' என்பவர் காசோலை ஒன்றினைப் பெற்று அதனை மேலங்கியில் உள்ள பாக்கெட்டில் வைத்துக் கொள்கிறார். அந்த மேலங்கியை உலர் சலவைக்காக கொடுத்தனுப்புகிறார். அதன் விளைவாக அந்த காசோலை மங்கி விடுகிறது. வங்கியர் அக்காசோலையை ஏற்க மறுக்கலாமா?

10. Ajay executes a promissory note on attaining majority in consideration of a money advanced to him, while he was a minor. Can Ajay be successfully sued on the promissory note?

அஜய் என்பவர் தான் இளவராக இருந்த பொழுது பெற்றிருந்த கடனுக்காக அவர் வயது வந்தவுடன் ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுக்கிறார். கடனாளர் அஜய் மீது வழக்கு தொடுத்தால் வெற்றி பெற இயலுமா?

---

**TA3A** Register No. | | | | | | | | |

**4996–21**

(For the candidates admitted from 2017-2018 onwards)

**LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Three-year Regular Course)

Second Year – Third Semester

**CONSTITUTIONAL LAW – II**

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What are the powers of a Governor? To what extent the Governor is bound by the advice of the cabinet?
மாநில ஆளுநரின் அதிகாரங்கள் யாவை? அவர் எந்த அளவிற்கு அமைச்சரவையின் அறிவுரைகளுக்கு கட்டுப்பட்டவர்?

2. Write about the appointment and transfer of the High Court Judges with reference to decided cases.
உயர்நீதி மன்றம் நீதிபதிகள் நியமனம் மற்றும் இடம் மாறுதல் குறித்து தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் விளக்குக.

3. Discuss whether the Indian Constitution possesses all the essential characteristics of a Federal Constitution.
கூட்டாட்சி அரசமைப்பின் இன்றியமையாத கூறுகள் இந்திய அரசியலமைப்பில் உள்ளனவா என்பதை விளக்குக.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. How does the union parliament get its power to legislate on state subjects?
மாநில பட்டியலில் உள்ள பொருள்கள் குறித்து நாடாளுமன்றம் சட்டம் இயற்ற எப்படி அதிகாரம் பெற்றுள்ளது?

5. Critically examine the nature and scope of parliamentary privileges in India. Is codification of privileges necessary in the present context?
இந்தியாவில் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமைகளின் தன்மை மற்றும் நோக்கெல்லையினை கூர்ந்தாராய்க. நிகழ்காலச் சூழலில் சிறப்புரிமைகளைத் தொகுத்து சட்டமாக்க வேண்டியது அவசியமாகுமா?

6. What is the effect of proclamation of emergency under Article 352? Can it be challenged before the courts? If so, on what grounds?
உறுப்பு 352-ன் கீழ் சாற்றறிவிக்கப்படும் நெருக்கடி நிலைமையின் விளைவு என்ன? நெருக்கடி நிலைமை சாற்றறிவிப்பது குறித்து நீதிமன்றங்களில் மறுதலிக்க இயலுமா? இயலுமெனில் எதன் அடிப்படையில்?

## **PART C** — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Constitutional amendments.
அரசமைப்பு சட்டத் திருத்தம்.

(b) Collective Responsibility.
கூட்டுப் பொறுப்பு.

(c) Residuary Powers.
எஞ்சிய அதிகாரங்கள்.

(d) Pardoning powers of the president.
குடியரசுத் தலைவரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரம்.

(e) Inter state Trade and Commerce.
மாநிலங்களுக்கிடையே வணிகம் மற்றும் வர்த்தகம்.

(f) Money Bill.
பணம் மசோதா.

(g) State liability.
அரசின் பொறுப்பு.

## **PART D** — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "No Government servant shall participate in any demonstration or resort to any form of strike in connection with any matter pertaining to his conditions of Service". Examine the validity of this Government Order.
அரசு ஊழியர் எவரும் தங்கள் வேலை நிலைமைகளை பொருட்டு எந்தவித ஆர்ப்பாட்டத்திலோ அல்லது வேலை நிறுத்தத்திலோ ஈடுபடுதல் கூடாது. இந்த அரசாணையின் செல்லும் தன்மையை விளக்குக.

9. An ordinance was issued by the president at a time when both houses of the parliament was not in session. This was strongly objected by the opposition parties. Discuss the Constitutional validity of the ordinance.
பாராளுமன்றத்தின் இரு சபைகளின் கூட்டத் தொடர் இல்லாத வேளையில் குடியரசு தலைவர் ஒரு அவசரச் சட்டத்தை பிரகடனப்படுத்துகிறார். இதனை எதிர்கட்சிகள் கடுமையாக எதிர்க்கின்றனர். குடியரசு தலைவரின் அவசரச் சட்டத்தின் செல்லும் தன்மையை பற்றி விவாதிக்கவும்.

10. A suit was filed by the State of Kerala against the State of Karnataka under Article 131 raising a dispute relating to non- implementation of the finding decision rendered by the Inter-State Water Dispute Tribunal. Decide the maintainability of the suit.
கேரள மாநிலம் உறுப்பு 131-இன் கீழ் மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சனை தீர்ப்பாயம் வழங்கிய கட்டுப்படுத்தக்கூடிய தீர்ப்பை நிறைவேற்றவில்லை என்பது தொடர்பாக கர்நாடக மாநிலத்தின் மீது வழக்கு ஒன்றை தொடர்ந்தது. இந்த வழக்கின் செல்லுத்தன்மையை ஆராய்க.

**TA3B**

Register No. | | | | | | | | |

**4997–21**

(For the candidates admitted from 2017-2018 onwards)

**LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Three-year Regular Course)

Second Year – Third Semester

LAND LAWS

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What do you understand by major and minor Inams. How they were abolished?

   பேரினாம்கள் மற்றும் சிற்றினாம்கள் என்பவை பற்றி நீவிர் அறிவதென்ன? அவை எவ்வாறு ஒழிக்கப்பட்டன?

2. Explain the various benefits that were conferred on the cultivating tenants by the Tamil Nadu Cultivating Tenants Protection Act 1955.

   1955-ஆம் ஆண்டின் தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தினால் பயிரிடும் குத்தகைதாரருக்கு அளிக்கப்பட்ட நன்மைகளை பற்றி விவரி.

3. What are the lands that are exempted from the Land Ceiling Act?

   நில உச்சவரம்புச் சட்டத்தில் விலக்களிக்கப்பட்டுள்ள நிலங்கள் யாவை?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the procedure for Re-settlement and Rehabilitation of people under the Land Acquisition Act, 2013.

   2013ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டத்தின் கீழ் மக்களின் மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்பு நடைமுறை குறித்து விளக்கவும்.

5. State the objects and reasons for the passing of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961.

   1961-ம் ஆண்டின் தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பை தீர்மானித்தல்) சட்டத்தின் நோக்கங்களையும், அச்சட்டம் அமல்படுத்தப்பட்டதற்கான காரணங்களையும் விவரி.

6. How is fair rent determined under the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960?

1960-ம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடம் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் நியாய வாடகை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Draft Assessment Roll.
வரைவு மதிப்பீட்டுப்பட்டியல்.

(b) Melwaram and Kudiwaram.
மேலவாரம் மற்றும் குடிவாரம்.

(c) Zamindari system.
ஜமீன்தாரி முறை.

(d) Permanent settlement
நிரந்தர நிலவரித் திட்டம்.

(e) Ryotwari system
இரயத்துவாரி முறை.

(f) Salient features of the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Confernment of ownership) Act, 1971.
1971-ம் ஆண்டின் தமிழ்நாடு குடியிருப்பு உறைவிடம் கொண்டோர் (உடைமை உரிமை வழங்கும்) சட்டத்தின் சிறப்பியல்புகள்.

(g) Subletting.
கீழ்க்குத்தகை.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் <u>இரண்டிற்கு</u> சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' has let his building to 'B' for rent. Due to sudden demise of his child, B did not pay rent for 6 months. Has 'B' committed any wrong which will lead to his eviction?

'A' என்பவர் தனது கட்டிடத்தை 'B' என்பவருக்கு வாடகைக்கு விட்டுள்ளார். தனது குழந்தை திடீரென இறந்துவிட்ட காரணத்தால் ஆறு மாதங்களாக 'B' வாடகை தரவில்லை. 'B' தாம் வெளியேற்றப்படுவதற்குரிய தவறு எதையும் புரிந்துள்ளாரா?

9. A family consisting of husband, wife and two sons had 15 standard acres of land as Stridhana property of the woman. How many acres the family can hold under the Ceiling Act?

கணவன், மனைவி மற்றும் இரு மகன்கள் கொண்ட ஒரு குடும்பத்தில் பெண் மட்டுமே சீதன சொத்தாக 15 தரநிலை ஏக்கர் நிலங்களைக் கொண்டிருந்தார். அக்குடும்பம் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எத்தனை தரநிலை ஏக்கர்களை வைத்துக் கொள்ளலாம்?

10. Landlord obtained an order of eviction against the tenant but before executing the decree died. Decide the validity of the decree.

கட்டிட உரிமையாளர் வாடகைதாரரை வெளியேற்றுவதற்கான தீர்ப்பாணையைப் பெற்றார். ஆனால் தீர்ப்பாணையை செயல்படுத்துவதற்கு முன்பு இறந்து விடுகிறார். தீர்ப்பாணையின் செல்லுந்தன்மையை தீர்வு செய்க.

---

Register No. | | | | | | | | |

**TA3C** **4928–21**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.

(Three – year Regular Course)

Second Year – Third Semester

INTERPRETATION OF STATUTES

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the rules to be followed in interpreting directory and imperative statutes.

   வழியுணர்த்தும் மற்றும் வினை ஏவும் இயற்சட்டங்களை பொருள் விளக்கம் கொள்வதில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை விளக்குக.

2. Elucidate the methods of interpretation adopted by the Courts in construing various provisions of a taxing statute.

   ஒரு வரிச் சட்டத்தின் பல்வேறு வகையங்களை பொருள் விளக்கம் காணும் பொழுது நீதி மன்றங்கள் பின்பற்றும் சட்டப் பொருள் விளக்க முறைகளைப் பற்றி தெளிவாக்குக.

3. Examine the internal aids to interpretation of a statute.

   சட்டப்பொருள் விளக்கத்தில் உதவும் அகக்காரணிகளை ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is meant by beneficial construction of statutes? What are the limitations?

   அனுகூலமான சட்டப் பொருள் விளக்கம் என்றால் என்ன? அது குறித்தான கட்டுப்பாடுகள் யாவை?

5. Explain the importance of Preamble in interpretation of a Statute.

சட்டப் பொருள் விளக்கம் காண்பதில் முகப்புரையின் முக்கியத்துவத்தினை விளக்குக.

6. What is meant by 'Golden Rule' of interpretation? Explain by referring to decided cases.

பொருள் விளக்கம் கொள்வதில் "பொன் விதி" என்றால் என்ன? அதன் தொடர்பான வழக்குகளுடன் விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Effect of Repeal.

நீக்கறவின் விளைவுகள்.

(b) Non-Obstante Clause.

'எது எவ்வாறு இருப்பினும்' சரத்து.

(c) Doctrine of Colourable Legislation.

முறையது போன்ற சட்டம்.

(d) Reddendo Singula Singulis.

'இதற்கிது' – என்ற விதி.

(e) Proviso.

வரம்புரை.

(f) Saving Clause.

காப்பு வாசகம்.

(g) Codifying Statutes.

தொகுப்பு செய் சட்டம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A', a Bangladeshi National, was raped by an Indian Public Official. In course of seeking relief under the constitutional remedies guaranteed under Part III of the Indian Constitution, a question is asked before the Court, whether a non-citizen is entitled for such a remedy – Decide.

இந்திய பொது அலுவலதிகாரி வங்காளதேசவரான 'அ' என்பவரை வன்புணர்ச்சிக்கு ஆட்படுத்துகின்றார். இதில் நீதிமன்றத்தின் முன் எழும் கேள்வி யாதெனில் அரசமைப்பு பகுதி IIIல் – உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள அரசமைப்பு தீர்வழிகள் வெளிநாட்டவருக்கு பொருந்துமா – தீர்மானிக்க.

9. Assam State Legislature made a law restricting the use of sound amplifiers. The law was challenged on the ground that the subject falls under List I. The state contended that the law was within the legislative competence of List II. Decide.

ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகள் விதித்து அஸ்ஸாம் மாநில சட்டமன்றம் சட்டம் இயற்றியது. இச்சட்டம் மத்திய பட்டியல் Iல் உள்ளதால் மாநில அரசுக்கு சட்டமியற்ற அதிகாரம் இல்லை என எதிர் வாதிடப்பட்டது. மாநில அரசோ இது பட்டியல் IIல் வரும் என மறுப்புரை செய்தது. தீர்மானிக்க.

10. 'A' has been detained under the Preventive Detention Act that his presence is an endangerment to law and order. But under the Preventive Detention Act a person can be detained only when his presence is against public order. 'A' challenges the detention order. The state defends that law and order and public order are one and the same. Decide.

'அ' வின் செயல்பாடு சட்டம் ஒழுங்கிற்கு ஆபத்தாக உள்ளதாக தடுப்புக்காவல் சட்டத்தில் சிறை வைக்கப்படுகிறார். தடுப்புக் காவல் சட்டத்தில் ஒருவரை சிறைவைக்க வேண்டுமெனில் அவரது செயல்பாடு பொது அமைதிக்கு ஆபத்தாக இருக்க வேண்டும் என்று தடுப்புக் காவல் சட்டம் கூறுகின்றது. 'அ' அவ்வுத்தரவினை எதிர்க்கிறார். அரசு சட்டம் ஒழுங்கும் பொது அமைதியும் ஒன்றே என எதிர்வாதம் செய்கின்றது. தீர்மானிக்கவும்.

TA3D  Register No. | | | | | | | | |

4929–21

(For the candidates admitted from 2017–2018 onwards)

**LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Three-year Regular Course)

Second Year – Third Semester

**COMPANY LAW**

Time : Two and half hours  Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is Articles of Association? Examine the salient features of Articles of Association and the importance of Articles of Association in the administration of company.
   செயல்முறை ஏடு என்றால் என்ன? செயல்முறை ஏட்டின் சிறப்பியல்புகளையும், நிறும நிர்வாகத்தில் அவற்றின் முக்கியத்துவத்தையும் ஆராய்க.

2. Explain the powers and functions of SEBI, (Securities and Exchange Board of India).
   செபியின் (இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்) அதிகாரம் மற்றும் பணிகளை விவரிக்கவும்.

3. Who are the persons entitled to apply for the winding up of a company? Explain their respective rights.
   ஒரு நிறுவனத்தை கலைப்பதற்கு விண்ணப்பம் செய்ய எந்தெந்த நபர்கள் உரிமையுடையவர்கள்? அவர்களின் முறையேயான உரிமைகளை விளக்குக.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each:**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the doctrine of “Indoor Management” and point out the exceptions if any.
   “அகநிலை மேலாண்மைக் கோட்பாடு” என்பதனை விளக்கி இவ்விதிக்கான விதிவிலக்குகளை குறிப்பிடுக.

5. What do you mean by debentures? Explain the various kinds of debentures.
   கடனீட்டுப் பத்திரம் என்றால் என்ன? இதன் வகைகளைப் பற்றி விளக்குக.

6. Examine the liability of a director for
   (a) Ultra vires acts
   (b) Breach of trust

   பின்வருவனவற்றுள் ஒரு இயக்குநரின் கடப்பாடுகளை ஆராய்க:
   (அ) வரம்பு மீறிய செயல்கள்
   (ஆ) பொறுப்புரிமை அமைப்பு மீறல்

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

   (a) Transfer of shares
   பங்கு மாற்றம்

   (b) Share Warrant
   பங்கு பற்றாணை

(c) Promoters
துவக்குநர்கள்

(d) Powers of auditors
தணிக்கையாளரின் அதிகாரங்கள்

(e) Illegal association
சட்ட முரண் அமைப்பு

(f) Sweat equity shares
வியர்வைத் தகைமை பங்குகள்

(g) Effect of forged documents
போலி ஆவணங்களின் விளைவு

**PART D** — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A company resolved and sought confirmation for shifting its registered office from Chennai to Bhopal due to some disturbance of ex-employees. The employees are strongly objecting it. Decide.
ஒரு நிறுமம், நிறும முன்னாள் ஊழியர்களின் பிரச்சினைகள் காரணமாக தன்னுடைய பதிவு அலுவலகத்தை சென்னையில் இருந்து போபாலுக்கு மாற்றுவது என தீர்மானித்து உறுதிப்படுத்தலுக்குக் கோரியது. இம்முடிவை நிறும ஊழியர்கள் வன்மையாக எதிர்த்தனர் – தீர்மானிக்க.

9. A company's directors decided to make "call on shares" but one of them had not been validly appointed. Can the call be enforced?
ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் பங்கு அழைப்புக் கட்டணத்தைத் தீர்மானித்தனர். ஆனால் இயக்குநர்களில் ஒருவர் செல்லத்தகு முறையில் நியமிக்கப்படவில்லை. இந்நேர்வில் பங்கழைப்புக் கட்டணம் செயலுறுத்தப்பட இயலுமா?

10. 'R' a proxy of 'V' filed the proxy form in the XYZ Co. Ltd., seven days ahead of its Annual General Meeting. Whether it is valid or not.
XYZ என்ற நிறுமத்தின் ஆண்டு பொதுக் கூட்டத்திற்கு 'V' என்ற உறுப்பினருக்கு பதிலாக 'R' என்பவர் கலந்து கொள்ள பதிலாள் மனு ஏழு நாட்களுக்கு முன்பாகவே தாக்கல் செய்யப்பட்டது. அது செல்லுபடியாகுமா?

---

**TA3E**

Register No. | | | | | | | | |

**4930–21**

(For the candidates admitted from 2017 –2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

BANKING LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define “Banker” and “Customer”. Explain about the special types of customers to a banker.

   ‘‘வங்கியர்’’ மற்றும் ‘‘வாடிக்கையாளர்’’ என்பதை வரையறை செய்து ஓர் வங்கியரின் சிறப்பு வாடிக்கையாளர்கள் பற்றி விளக்குக.

2. Define “passbook”. Explain about the different types of accounts in a banking system.

   ‘‘செல்லேடு’’ என்பதை வரையறை செய்து வங்கி அமைப்பில் உள்ள பல்வேறு வகையான கணக்குகள் பற்றி விளக்குக.

3. What is General Lien? What are the rights and duties of a banker?

   பொதுப் பற்றுரிமை என்றால் என்ன? ஒரு வங்கியரின் உரிமைகள் மற்றும் கடமைகள் யாவை?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss in detail about the recent trends in banking system.

   வங்கி அமைப்பில் சமீபத்திய போக்குகள் பற்றி விரிவாக விவாதிக்கவும்.

5. Define “promissory note”. Discuss about the different categories of Negotiable Instruments.

   ‘‘கடனுறுதிச் சீட்டினை’’ வரையறை செய்க. பல்வேறு வகையான மாற்று முறையாவணங்களை விவாதிக்கவும்.

6. Who is a "holder"? What are the rights and privileges of a Holder in Due Course?

''உடையவர்'' என்பவர் யார்? முறைப்படி உடையவரின் உரிமைகள் மற்றும் சலுகைகள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Kinds of endorsement

புறக்குறிப்பின் வகைகள்

(b) Rule in Clayton's case

கிளேட்டன் வழக்கின் விதி

(c) Collecting banker

வசூலிக்கும் வங்கியர்

(d) Debt Recovery Tribunal

கடன் வசூலிக்கும் தீர்ப்பாயம்

(e) Crossing of a cheque

காசோலையை கோடிடுதல்

(f) Criminal liability for dishonour of cheque

காசோலை மறுதலிக்கப்படும் நேர்வில் குற்றவியல் பொறுப்பு நிலை

(g) Nationalization of banks

வங்கிகள் தேசியமயமாக்கல்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' a customer of a 'Y' bank issued a cheque to 'Z' for Rs. 10,000. The next day 'X' sent a "stop payment" communication to the 'Y' bank. 'Z' presented the cheque and the 'Y' bank had honoured the cheque. 'X' filed a case for honouring the cheque, despite his instruction for stop payment. Will he succeed? Decide.

'X' என்னும் வாடிக்கையாளர் 'Y' வங்கியரின் காசோலையை 'Z' என்பவருக்கு ரூ. 10,000/-க்கு கொடுத்துவிட்டு அடுத்த நாளே 'X' என்பவர் 'Y' வங்கிக்கு ''பணம் கொடுப்பதை நிறுத்தவும்'' என்ற அறிவிப்பை தெரிவித்து விட்டார். 'Z' என்பவர் காசோலையை 'Y' வங்கியில் சமர்ப்பித்து 'Y' வங்கி காசோலைக்கான பணத்தை 'Z'க்கு வழங்கியது. 'X' என்பவர் தாம் ''பணம் வழங்குவதை நிறுத்தி வைக்கவும்'' என்ற அறிவிப்பு அனுப்பியதற்கு மாறாக வங்கி பணத்தை வழங்கிவிட்டது என கூறி வங்கிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்கிறார். அவர் வெற்றி பெறுவாரா? முடிவு செய்க.

9. 'X' borrows Rs.10,000 from 'Y' bank. 'Z' stands as surety with regard to the repayment of loan. Thereafter 'X' and 'Y' agree that 'X' may repay Rs.5,000 instead of Rs.10,000. Decide the liability of 'Z'.

'X' என்பவர் 'Y' வங்கியிலிருந்து ரூபாய் 10,000 கடனாக பெற்றார். மேற்படி கடனுக்கு 'Z' பிணையாளராக ஏற்று கடனை திரும்ப செலுத்த சம்மதிக்கின்றார். அதன் பிறகு 'X' மற்றும் 'Y' இணைந்து 'X' என்பவர் ரூபாய் 10,000க்கு பதிலாக ரூ. 5,000 திருப்பி கொடுக்கலாம் என்று உடன்படுகின்றனர். 'Z' என்பவரின் பொறுப்பு நிலை என்ன?

10. Axis Bank receives Rs.5,000 on behalf of Arun from Ashwin, but by mistake the bank enters Rs.50,000 in Arun's account. Can Arun seek advantage of the bank's mistake? Decide.

ஆக்ஸிஸ் வங்கி அருண் என்பவருக்காக அஸ்வின் என்பவரிடம் இருந்து ரூபாய் 5,000 பெறுகின்றது. ஆனால் தவறுதலாக அருணின் வங்கிக் கணக்கில் ரூ. 50,000 வரவு வைத்து விடுகின்றது. வங்கியின் தவறை அருண் தனக்கு சாதகமாக பயன்படுத்தி ரூ.50,000ஐ பெற இயலுமா? தீர்மானிக்கவும்.

———